செய்தி வெளியீடு எண்:553 நாள் :12.10.2013

# செய்தி வெளியீடு

திரைத்துறை என்பது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் சங்கமமாகும். இத்துறையில் இசையில் வல்லவர்கள், இயலில் வல்லவர்கள், நாட்டியத்தில் வல்லவர்கள் மற்றும் நடிப்பில் வல்லவர்கள் இருக்கின்றனர். வாழ்க்கையின் பிரதிபலிப்பே திரைப்படமாகும். பொழுது போக்காகவும், அதே சமயம் வாழ்க்கையின் திறனாய்வாகவும் திரை உலகம் விளங்குவதால் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் இது தன்பால் ஈர்க்கின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த திரைப்படத்துறையில் நல்ல கலைஞர்களை உருவாக்குவதற்காக, எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனம், பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் தயாரிப்பதற்கு தேவையான தொழில்நுட்பங்களையும், திரைப்படம் தொடர்பானவைகளையும் மாணவர்களுக்கு கற்றுத் தருகிறது.

எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தினை, திரைப்படத்துறையில் ஏற்பட்டு வரும் தொழில் நுட்ப மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் மாற்றியமைப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் உள்ள முன்காண் திரையரங்கு (Preview Theatre) நவீன வசதிகள் ஏதுமற்ற பழமையான திரையரங்காக இருந்தது. மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப திரையீடு செய்ய போதுமான வசதிகள் இத்திரையரங்கத்தில் இல்லை. இதனால் இங்கு பயிலும் மாணவ, மாணவியர்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகி வந்தனர். இதனை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் அமைந்துள்ள முன்காண் திரையரங்கத்தை 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் புனரமைத்திட ஏற்கெனவே ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி இந்நிறுவனத்தின் முன்காண் திரையரங்கம் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த முன்காண் திரையரங்கை, இங்கு பயிலும் மாணவ, மாணவியர்கள் மாறிவரும் தொழில் நுட்பத்திற்கு ஏற்ப முழுமையாக பயன்படுத்திடும் வகையில் நவீனப்படுத்தி, திரைப்படங்களை உன்னத தரத்துடன் திரையிட்டுக் காட்டும் வகையில், தொடர் மின்வசதி அளிக்கும் 15 KVA online UPS மற்றும் துணை பாகங்களுடன் அதி உயர் டிஜிட்டல் டால்பி, பார்கோ புரொஜக்டர், சுற்றுச் சூழல் ஒலியமைப்பு உபகரணங்கள் (Surround Sound), வட்ட ஒலி இணைப்பு (Ring Audio Mixer), நுண்ணிய ஒலிபேசி ஒலிபெருக்கி (Speaker Micro Phone), பொது ஒலியமைப்பு (Public address system) ஆகிய நவீன தொழில் நுட்பக் கருவிகளை வாங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்காக 90 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், இந்நிறுவனத்தில் பயிலும் மாணவர்களுக்காக 1984 ஆம் ஆண்டு 35 பேர் தங்கக்கூடிய விடுதி கட்டப்பட்டது. இந்த விடுதிக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும், மேலும் இந்த நிறுவனத்தில் திரைப்படம் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி பெற சேரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இந்த விடுதியில் இடவசதியின்மையின் காரணமாகவும், இந்த ஆண்டு முதல் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் (Animation and Motion Picture Visual Effects) பாடப்பிரிவுகள் தொடங்கப்படுவதால் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை 240 ஆக உயருவதாலும், இந்நிறுவத்திற்கென புதியதாக விடுதி ஒன்று கட்டுவது மிகவும் அவசியமாகிறது. எனவே, 100 மாணவர்கள் தங்கி கல்வி பயிலும் வகையில் உணவகம், உணவருந்தும் இடம் மற்றும் வரவேற்பறை வசதியுடன் கூடிய புதிய மாணவர் விடுதியை கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவ, மாணவியர்கள் நாளுக்கு நாள் மாற்றமடைந்து வரும் நவீன தொழில் நுட்பத்தை நன்கு அறிவதற்கும், மாவட்டங்களிலிருந்து இங்கு பயில வருகை தரும் மாணவ, மாணவியர்களுக்கும் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 12.10.2013.